





We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## மார்ச் - 2019

*We Are Here..!! To Guide You..!!*

TAMIL NADU
GLOBAL INVESTORS MEET 20
INVESTORS' PARADISE








# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## மார்ச் - 19.03.2019

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- விருதுகள்
- நியமனங்கள்
- முக்கிய தினங்கள்














The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams

8939 144 344 www.weshineacademy.com

# இந்திய நிகழ்வுகள்

- புவிசார் குறியீட்டு பதிவகம் **5 வகையான காபிகளுக்கு புவிசார் குறியீடுகளை** அளித்துள்ளது.
    1) கூர்க் அராபிகா காபி – கர்நாடகா
    2) வயநாடு ராபஸ்டா காபி – கேரளா
    3) சிக்மளூர் அராபிகா காபி – கர்நாடகா
    4) பாபா புடங்கிரி அராபிகா காபி – கர்நாடகா
    5) அரக்கு பள்ளத்தாக்கு அராபிகா காபி – ஆந்திர பிரதேசம்
- குறிப்பு:
    - புவிசார் குறியீட்டு பதிவகம், **சென்னையில்** அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

- தேசிய ஆவணக் காப்பகத்தின் **129வது நிறுவன தினத்தையொட்டி, மார்ச் 11 முதல் ஏப்ரல் 10 வரை**, புதுடெல்லியில் **"கும்ப்"** என்ற பெயரில் கும்பமேளா பற்றிய **கண்காட்சி** தொடங்கியுள்ளது.
    - இந்த கண்காட்சியில் கும்பமேளா நடக்கும் விதம் குறித்த அசல் ஆவணங்கள் இடம் பெற்றுள்ளன.
- குறிப்பு:
    - யுனெஸ்கோ அமைப்பின் கலாச்சார பாரம்பரிய பட்டியலில் இடம் பெற்ற **"கும்பமேளா"**, ஹரித்துவார், அலகாபாத், நாசிக், உஜ்ஜைன் ஆகிய 4 இடங்களில், சுழற்சி முறையில் **12 ஆண்டுகளுக்கு ஒருமுறை** நடைபெறுகிறது.

# விளையாட்டு நிகழ்வுகள்

- **ஹாங்காங்கில் நடைபெற்ற 2019** – ஆசிய இளையோர் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் ஆண்களுக்கான **800 மீட்டர் ஓட்ட பந்தயத்தில் தமிழக வீரர் "மகேஷ்"** வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார்.

- **சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலானது** (ICC) ஒருநாள் போட்டிகளின் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது.
    - அணிகளின் தரவரிசையில் **இங்கிலாந்து அணியானது முதலிடம்** பிடித்துள்ளது. **இந்தியா இரண்டாவது இடத்தில்** உள்ளது.
    - மட்டை வீச்சாளர் தரவரிசையில் இந்தியாவின் **விராட் கோலி**

மற்றும் ரோகித் சர்மா ஆகியோர் முதலிரண்டு இடங்களைப் பிடித்துள்ளனர்.

- பந்து வீச்சாளர் தரவரிசையில் இந்தியாவின் ஜஸ்பிரித் பும்ரா முதலிடம் பிடித்துள்ளார்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- இந்தியாவின் முதல் மூன்று சுற்றுவட்டப் பாதையில் செயற்கைகோளை நிலைநிறுத்தும் இராக்கெட் **"PSLV C-45"** மூலம், இந்தியாவின் **DRDO** உருவாக்கிய **எமிசாட்** (EMISAT) மற்றும் இந்திய விண்வெளி அறிவியல் தொழில்நுட்ப நிறுவனத்தின்(**IISC**) நானோ செயற்கை கோள் உட்பட 30 செயற்கைகோள்கள், ஏப்ரல் 01, 2019ல் விண்ணில் செலுத்தப்பட உள்ளது.

## விருதுகள்

- இலக்கியத்தில் சிறந்த பங்களிப்பை ஆற்றியதற்காக வழங்கப்படும் விருதான **கௌசமிகராஜ் தேசிய விருதானது** (Kusumagraj National award) **"வெத் ரஹீ"** (Ved Rahi) என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

## நியமனங்கள்

- லோக்பால் அமைப்பின் முதலாவது தலைவராக உச்சநீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி **"பினாகி சந்திர கோஷ்"** நியமிக்கப்பட உள்ளார்.
- குறிப்பு:
  - நாட்டின் பிரதமர் உட்பட மத்திய மந்திரிகள் மற்றும் மத்திய அரசு அதிகாரிகள் மீதான ஊழல் புகாரை விசாரிக்க லோக்பால் அமைப்பை ஏற்படுத்துவதற்கான மசோதா **2013ல்** நிறைவேற்றப்பட்டது.

## முக்கிய தினங்கள்

- **உலகளாவிய மறுசுழற்சி தினம் - மார்ச் 18** (Global Recycling Day)
  - மறுசுழற்சி செய்வதன் மூலம் ஏற்படும் எதிர்கால பயன்பாடு

குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, **2018ம் ஆண்டு முதல் மார்ச் 18ம்** தேதியை உலகளாவிய மறுசுழற்சி தினமாக கடைபிடிக்கப்படுகிறது.

- 2019ம் ஆண்டின் உலகளாவிய மறுசுழற்சி தினத்தின் கருத்துரு : - **"எதிர்காலத்திற்காக மறுசுழற்சி"** (Recycling into the Future)

We Shine Academy™